**வெலிமட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, வெலிமட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான வேலைகள் தொடர்பான கடன்கொடுத்தோர்கள் ரூபா 1,004,600 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 121,600 தொகையான மீளாய்வாண்டிற்கான காகிதாகிப் பொருள் இறுதி இருப்பிற்கான கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய நீதிமன்ற தண்டப்பணம் மீளாய்வாண்டில் ரூபா 163,107 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,594,049 தொகையான முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஆயுர்வேத மருந்து இருப்புகளாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,198,170 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அத்தகைய இருப்பு பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்ட பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(i) கடன்கொடுத்தோர்களிற்கான ஒதுக்கீட்டின் கீழ் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி அரச ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்திய வேண்டியவை ரூபா 16,055 ஆல் குறைத்துக்காட்டியமை.

(ii) சொத்துக் கணக்குகள் மற்றும் மூலதன முதலீட்டு கணக்கின் வருமான பங்களிப்புக் கணக்குகளில் ரூபா 5,190 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 13 நூலக புத்தகங்கள் உள்ளடக்காமை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

காசு புத்தகம் மற்றும் வங்கி இணக்கக்கூற்றிற்கிடையில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையில் ரூபா 33,000 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகள் மீதிகள் ரூபா 30,600,187 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதிகள் ரூபா 2,327,991 ஆகவிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 44,128,766 பெறுமதியான எட்டு கணக்கு விடயங்களான தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ / சரிபார்க்கப்பட்டிருக்கவோ முடிந்திருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வில் பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவு | வாகன சேவை நிலையத்திற்கான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டிற்கான ரூபா 1,400 தொகையான முத்திரை தீர்வை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு திருப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேசசபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| (i) விதி 156 | பகுப்பாய்வு நிரலுடனான காசுப்புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 218 | காணி மற்றும் கட்டிடம் தொடர்பிலான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து 32 சந்தர்ப்பங்களில் பலதரப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,443,191 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2016 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு கணக்கிற்கு வரவு வைக்கப்படாத ரூபா 2,385 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பில் அதனை வருமானமாக இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களிற்கு மேலாக கணக்கிலிருந்த ரூபா 7,310,970 காலங்கடந்த வைப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 757(2) | களஞ்சிய பற்றாக்குறையினை அவை இனங்கண்ட பின்னர் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென இருந்த போது கெப்பிற்றிப்பொல உபஅலுவலகம் தொடர்பில் அதற்கிணங்க அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | ரூபா 95,140 தொகையான உத்தியோகத்தர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2002 திசெம்பர் 28 ஆந் திகதிய IVI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 14 கணனிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2009 ஏப்ரல் 16 இன் 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | வலிமட பிரதேச சபையில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2.11 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களிற்கான எரிபொருள் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | பொது சேவை ஆணைக்குழுவின் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க வர்த்தமானியின் XVIII ஆம் அத்தியாயம் மற்றும் இணைத்த சேவையிலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்குரிய இடமாற்ற திட்டத்தின் 2.2.2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 05 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேலாக வலிமட பிரதேச சபையின் சேவைக்கு இணைக்கப்பட்டிருந்தனர். |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,918,028 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் போது கணக்காய்விற்குச்

சமர்பித்திருந்த நிதிக கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 22,651,504 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

---

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

---

(அ) மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்பட்ட முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானங்களின் அறவீட்டு செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது.

(ஆ) சபையின் அதிகாரப்பிரதேசத்தில் விளம்பரங்களை காட்சிப்படுத்துவது தொடர்பில் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்த போதும், உரிய கட்டணங்கள் 2017 சனவரி 24 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்தகைய 12 விளம்பரங்கள் சபையினது அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டது என கணக்காய்வு தெரிவுச்செவ்வையில் அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 குத்தகை வாடகை

---

ரூபா 1,293,950 தொகையான கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து ரூபா 15,094,990 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையீன்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 2,713,446 தொகையான சம்பளங்கள் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 85,211 தொகையிலான இடர் கடன்களானது பிணைதாரர்கள் இல்லாமல் செலுத்தப்பட்டதுடன் இந்த தொகையானது இன்றைய திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

---

(அ) இரண்டு கை உழவு இயந்திரங்கள் 2 நீர் பௌசர்கள், அணைக்கும் வாகனங்கள் காற்றுக்குழாய் மற்றும் கலப்பையொன்று நீண்டகாலப்பகுதிக்காக விளைவற்றிருந்தது.

(ஆ) நடைமுறைக் கணக்கிலுள்ள விளைவற்ற காசு மீதிகள் ரூபா 6,300,495 ஆகவிருந்தது.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள்